Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம்௵ அக்டோபர்௴ 3௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 29

ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் அக்கிரமங்கள்

ஜெர்மானியர்களின் கொடூரச் செய்கைகள்

நாட்டுமக்களின் மனக்கொதிப்பு

கொடுங்கோலாட்சியை அழிக்க முயற்சிகள்

ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில், கொடுங்கோல் ஆட்சி தாண்டவமாடுகிறது. நாட்டு மக்களுக்கு பலவிதமான கொடுமைகள் ஜெர்மானியர்களால் செய்யப்படுகின்றன. அவர்களுடைய அட்டகாசங்களைப்பற்றியும், அக்கிரமங்களைப்பற்றியும், கொஞ்சம்கொஞ்சமாக விவரங்கள் வெளி வந்திருக்கின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் மக்கள் படும் கஷ்டம் அவ்வளவு இவ்வளவு அல்ல. எங்கு பார்த்தாலும் அமைதி என்பதே கிடையாது. கொடுமைப் படுத்தப்பட்ட மக்களின் மனதில் ஜெர்மனிக்கு எதிராக விரோத எண்ணம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அந்த எண்ணம் ஜெர்மனிக்கு இரகசியமாக பலவித இடையூறுகள் செய்வதில் அடிக்கடி காண்பிக்கப்படுகிறது.

ஜெர்மானியர்கள் செய்துவரும் கொடூரங்களைப் பற்றிக்கூட மக்கள் சட்டை செய்வதை விட்டுவிட்டார்கள். ஜெர்மானியர்களுடைய யுத்த முயற்சிக்கு எவ்வளவு கெடுதல் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்வதற்கு அவர்கள் கங்கணங்கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்காவின் அரசியல் மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல், இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஜெர்மானியர்களுடைய முயற்சிக்கு உதவும்படியான தொழிற்சாலைகளையும், யுத்த ஆயுத சாலைகளையும் நாட்டு மக்கள் வெவ்வேறு முறைகளில் நாசம் செய்து வருகிறார்களென்றும், அதைப்பற்றிய உண்மையான விவரங்கள் தனக்குக் கிடைத்திருக்கின்றன என்றும் மிஸ்டர் ஹல் கூறினார். ஆனால், அந்த விவரங்களை வெளியிட்டால், அது சம்பந்தமானவர்கள் ஜெர்மனியர்களால் அதிக இம்சைப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவதால் அவைகளை வெளியிடவில்லை என்று அவர் அறிவித்தார்.

இருந்தபோதிலும், ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் அநியாயங்களைப்பற்றியும், ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் செய்யும் கொடுமைகளைப் பற்றியும், ஜெர்மன் சிப்பாய்கள் நடத்தும் கெட்ட நடவடிக்கைகளைப்பற்றியும் வெளி வந்திருக்கும் செய்திகளைப்பற்றி குறிப்பிடலாம் :—

போலந்து

போலந்து நாட்டில் நடக்கும் அக்கிரமங்களுக்குக் கணக்கு வழக்கேயில்லை. நாட்டுமக்கள் ஏராளமாகக் கொலை செய்யப்படுகிறார்கள். கூட்டங்கூட்டமாகச் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். கொலை செய்வதற்கு முன் அவர்கள் பலவிதமான சித்திரவதை செய்யப்படுகிறார்கள். போலீஸ் மக்களுடைய உணவுப் பொருள்களும், சொத்து சுதந்தரங்களும் ஜெர்மானியர்களால் கைப்பற்றப்படுகின்றன. தொழிலாளிகளைப் பிடித்து கட்டாய வேலை வாங்குகிறார்கள். பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. கலாசாலைகள் அடைக்கப்பட்டன. சர்வ கலாசாலை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு கொடூரக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் கொடுமை தாங்க முடியாமல் இறந்து போனார்கள். போலந்தில் ஜெர்மானியர் செய்த அக்கிரமங்களில் சில மாத்திரம் இங்கே குறிப்பிடப்பட்டன.

செக்கோஸ்லாவாக்கியா

செக்கோஸ்லாவாக்கியா என்பது ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட மற்றொரு மத்திய ஐரோப்பிய நாடு. அங்கும் ஜெர்மன் கொடூர ஆட்சி நடந்து வருகிறது. அதனால் நாட்டு மக்கள் மிகுந்த மனக் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். உள் நாட்டுத் துரோகியின் தலைமையின் கீழ் இந்தக் கொடூர ஆட்சி நடந்தது. மக்களின் மனக்கொதிப்பு அதிகரித்து வரம்பு கடந்துவிடும்போலிருந்தது. உடனே அந்தத் துரோகிக்குப் பதிலாக, ஒரு ஜெர்மன் தளகர்த்தர் செக்கோஸ்லாவாக்கியாவின் அரசாங்கத் தலைவராக நியமிக்கப்பட்டார். நாட்டின் முதல் மந்திரி தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

பொகீமியா, மொரேவியா, என்ற இரண்டு பெரிய மாகாணங்களில் ராணுவச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. நெருக்கடியான நிலைமை இருப்பதாக அறிவிக்கப்பட்டது. தண்டனை செய்யப்படுபவர்கள் மேல் கோர்ட்டுக்கு ‘ அப்பீல் ’ செய்வதற்கு முடியாது. தண்டனை கொடுக்கப்பட்டதும் உடனே நிறை வேற்றப்படுகிறது. எல்லா குற்றங்களும் ராணுவச்சட்டக் கோர்ட்டுகளால்தான் விசாரணை செய்யப்படும். இம்மாதிரியான விவரங்கள் ஜெருசலேம் நாட்டில் எட்டியிருக்கின்றன. ஜெருசலேம் நாட்டில் ஏராளமான யூதர்கள் இருக்கிறார்கள். செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து தப்பித்துக்கொண்டுபோன செக் மக்களும் இருக்கிறார்கள்.

யூதர்கள்

ஜெர்மன் ஆட்சியின்கீழ் யூதர்கள் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கது. ஜெர்மனியில் யூதர்கள் சம்பந்தமான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. யூதர்களை எந்தவிதமாக நடத்த வேண்டும், யூதர்கள் எந்த விதமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி அதில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆறு வயதுக்கு மேற்பட்ட எல்லா யூதர்களும், தாங்கள் யூதர்கள் என்று தெரியும்படி, இடது மார்பில் வெள்ளையும் கருப்பும் கலந்த ஒரு சின்னம் அணியவேண்டும். அணியாவிட்டால் உடனே கொடூரக் கொட்டடிக்குக் கொண்டு போகப்படுவார்கள். வர்த்தக வேலைகளிலும், அரசாங்க வேலைகளிலும், அவர்கள் இருக்கக்கூடாது. போலீஸ் அனுமதிச் சீட்டு இல்லாமல், வாடகை வண்டிகளில் கூட ஏறக்கூடாது. ‘பஸ்’, ‘ டிராம்’ முதலிய பொது வண்டிகளில் யாராவது நின்றுகொண்டிருந்தால், இவர்கள் உட்கார்ந்து இருக்கும் இடத்திலிருந்து எழுந்துவிட வேண்டும். ரயில்வே பிரயாணிகள் தங்குமிடங்களிலும், சாப்பிடும் இடங்களிலும் அவர்கள் பிரவேசிக்கக்கூடாது.

ஹனோவரில் இருந்த 1,000 யூதர்கள் தங்களுடைய வீட்டை விட்டுப் போகும்படி கட்டளையிடப்பட்டார்கள். அந்த நகரத்தில் சவங்கள் வைத்திருக்கும் இடத்தில் தங்கும்படி அனுப்பப்பட்டார்கள். அங்கு இடம் இல்லாதவர்கள் யூதர்களின் சுடுகாட்டில் தங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஜெர்மன் சிறைச்சாலைகளில் $1\frac{1}{2}$ லட்சம் யூதர்கள் கைதிகளாக இருக்கிறார்கள். உடல் வலிமையுள்ள யூதர்கள் வேலை செய்வதற்குக் கொண்டு போகப்பட்டார்கள். அரசாங்கத் தொழிற்சாலைகள், கல் உடைக்கும் சாலைகள், ரோட்டு போடும் வேலைகள், விவசாய வேலை, இவைகளில் யூதர்கள் போடப்படுகிறார்கள்.

ஜெர்மனி ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளுக்கு வெளியிலும் யூதர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக நடத்தப்படுகிறார்கள். பிரான்ஸில் முக்கியமான உத்தியோகங்கள் யூதர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஸ்தானீகர், பாங்கர், விளம்பர ஏஜெண்டு, நில கமிஷன் ஏஜெண்டு, பத்திரிகை ஆசிரியர், முதலிய வேலைகளில் யூதர்கள் இருக்கக்கூடாது. பிரான்ஸில் உள்ள யூதர்கள் ரேடியோவாவது டெலிபோனாவது வைத்திருக்கக்கூடாது. பாங்கிகளிலிருந்து தங்களுக்குச் சொந்தமான நகைகளாவது பணமாவது வாங்கக்கூடாது. யூதர்கள் கடை வைக்கக்கூடாது. ஆயிரக்கணக்கான யூதர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் யூதர்கள் எல்லாரும் மற்ற மக்களோடு கலக்காமல், தனிப்பிரதேசத்தில் வசிக்கவேண்டும்.

பிரான்சு

பிரான்ஸில் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்களையும், ஜெனரல் டிகாலைச் சேர்ந்தவர்களையும், ஜெர்மானியர்கள் கைது செய்து ஜெயிலில் போடுகிறார்கள். நாட்டில் ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி அதிகரித்துக்கொண்டு வருகிறது. பிரான்சின் துரோகியாகிய லவாலைக் கொல்வதற்கு ஒரு முயற்சி செய்யப்பட்டது. இது பரவிவரும் புரட்சி இயக்கத்தின் அறிகுறியாகும். ஜெர்மானியர்கள் கொல்லப்படுவதும், ஜெர்மன் ஸ்தாபனங்கள் வெடிகுண்டுகளால் நாசமாக்கப்படுவதும் தினந்தோறும் நடந்துவரும் காரியங்கள். பிரான்ஸில் 100-க்கு 95 பேர் பிரிட்டன் வெற்றியடையவேண்டும் என்ற மனப்பான்மையுடன் இருப்பதாகத் தெரிகிறது. இந்த நாட்டில் அமைதியின்மையும் கலவரமும் அதிகரித்து வருவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. தார்லான் என்ற துரோகிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், நாட்டு நாணயத்திட்டம் பாழான நிலைமை, உணவுப்பொருள் பஞ்சம், ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்கள்—இவைகளெல்லாம் நாட்டில் ஜெர்மனிக்கு விரோதமான மனப்பான்மையை அதிகப்படுத்தியிருக்கிறது. தினந்தோறும் பிரான்சு மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஒரு ஜெர்மானியன் கொல்லப்பட்டால், 6 அல்லது 7 பிரெஞ்சுக்காரர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இதனால் பிரெஞ்சு மக்களின் தைரியம் குறைந்துவிடவில்லை. தார்லானின் அரசாங்கத்துக்கு எதிராக உணர்ச்சி அதிகரித்துக்கொண்டு வருகிறது என்று பிரிட்டனுக்குத் தப்பி வந்த ஒரு பிரெஞ்சுக்காரர் கூறியிருக்கிறார்.

ஆல்சாஸ்

ஆல்சாஸ் என்பது பிரான்ஸில் ஒரு பிரசித்திபெற்ற மாகாணம். இந்த மாகாணத்துக்கு அதிகாரியாக ஒரு ஜெர்மன் கவர்னர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு கடுமையான உத்திரவிட்டிருக்கிறார். அந்த உத்தரவின் சில பாகங்கள் பின்வருமாறு :—

"ஜெர்மன் பாஷை தெரிந்த யாரும் பிரெஞ்சு பாஷையில் பேசக்கூடாது. பேசினால் உடனே கைது செய்யப்பட்டு, கடூரக் கொட்டடியில் ஒரு வருஷம் கடினகாவல் தண்டனை கொடுக்கப்படும். இந்த உத்தரவு 1941-ம௵ எப்ரல்மீ 27-ந் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

"வெளிநாட்டு ரேடியோ நிலையச்செய்திகளை யாரும் கேட்கக்கூடாது. யாராவது கேட்டால் உடனே கைது செய்யப்பட்டு, கடூரக் கொட்டடியில் 2 முதல் 5 வருஷம் வரையில் கடினகாவலில் வைக்கப்படுவார்கள்.

"ஜெர்மனிக்கு விரோதமாகப் பேசுபவர்கள் உடனே தூக்கிலிடப்படுவார்கள்.

"1941-ம௵ ஜூன்மீ 1-ந் தேதியிலிருந்து, 'பாஸ்க் பெரட்' என்ற பிரெஞ்சு தொப்பியை யாராவது தலையில் அணிந்தால், உடனே அவர் கைது செய்யப்பட்டு, கடூரக் கொட்டடியில் ஒரு வருஷம் கடினகாவலில் வைக்கப்படுவார்."

ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் கொலைகளைப் பற்றியும், பிரான்சின் தலைநகரமாகிய பாரிசில் நடக்கும் தூக்குத் தண்டனைகளைப்பற்றியும் குறிப்பிட்டு ஒரு அமெரிக்கப் பத்திரிகை எழுதியிருக்கிறது. பிரான்ஸில் பொது மக்களின் மனம் கொதித்துக்கொண்டிருக்கிறது ; அதை இம்மாதிரியான கொடூரங்களினால் அடக்கிவிடலாம் என்று ஜெர்மானியர்கள் நினைத்திருக்கிறார்கள் ; இது பெரிய தவறாகும் என்று அந்த பத்திரிகை கூறுகிறது.

நார்வே

நார்வேயில், ஜெர்மானியர்கள் நாட்டுமக்களைக் கொடுமைப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நாட்டுமக்கள் தைரியமான உணர்ச்சியுடன் இருக்கிறார்கள். தொழிலாளர் ஐக்கிய உணர்ச்சி நாட்டில் பலமாக இருக்கிறது. அதனுடைய பலத்துக்கு அஞ்சி, ஜெர்மானியர்கள் தொழிலாளர்கள் கேட்ட சில விஷயங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்தவர்களை ஜெயிலிலிருந்து விடுதலை செய்திருக்கிறார்கள். பொது மக்களின் அதிருப்தியை அதிகமாகப்பெற்ற ஜெர்மன் கமிஷனரை விலக்கிவிட்டிருக்கிறார்கள். நார்வே மக்களின் உணர்ச்சிக்குப் பயந்து, வடமேற்கிலும் வடகிழக்கிலும், ஜெர்மன் படைகளைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். முக்கியமான பட்டணங்களில், கைது செய்யப்பட்டவர்களின் கணக்கு அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆஸ்லோ சர்வகலாசாலையின் அத்தியட்சகர், ஜெர்மானியர்களால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். நார்வேயின் தலைநகரத்தில் ஜெர்மன் பட்டாளங்கள் தெருக்களில் பாதுகாப்பு வேலை செய்கின்றன. மூலைமுடுக்குகளில், ஜெர்மன் சிப்பாய்கள் யந்திர பீரங்கிகளை வைத்துக்கொண்டு தயாராயிருக்கிறார்கள்.

பெல்ஜியம்

பிரான்ஸில் இருக்கிற நிலைமை பெல்ஜியத்திலும் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டால், அதற்குப் பதிலாகப் பல பெல்ஜியர்கள் கொல்லப்படுகிறார்கள். முக்கியமானவர்களைப் பிணையாக ஜெர்மானியர்கள் கைது செய்து வைத்திருக்கிறார்கள். ஒரு ஜெர்மானியர் கொல்லப்பட்டால், பிணையாயிருக்கும் ஐந்து பெல்ஜியர்கள் உடனே சுடப்படுவார்கள். இப்படியிருந்தும், பெல்ஜியத்தில் ஜெர்மனிக்கு எதிராக உணர்ச்சி அதிகரித்துக்கொண்டு வருகிறது.

ருமேனியா

ருமேனியாவை ஜெர்மானியர்கள் கசக்கிப்பிழிகிறார்கள். ஜெர்மானியர்கள் ராணுவ மோட்டார்களில் ஏறிச்சண்டை செய்கிறார்கள். ருமேனியர்கள் கால் நடையாகச்சென்று சண்டை செய்யவேண்டும். ஜெர்மானியர்கள் யுத்தத்தில் காயமடைந்தால், மோட்டார்களில் கொண்டு வரப்பட்டு, சிகிச்சைக்கு அனுப்பப்படுகிறார்கள். ருமேனியர்கள் காயமடைந்தால் கட்டை வண்டிகளில் கொண்டுவரப்படுகிறார்கள், அல்லது கால்நடையாகவே கொண்டுவரப்படுகிறார்கள். ரஷ்யாவில் தெற்குப் பகுதியில் ருமேனியர்கள் அநேக கஷ்டங்களுக்கிடையில் சண்டை செய்கிறார்கள். ரஷ்யாவுடன் தனியாக சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டால் மிகவும் நல்லது என்று கூறிய 12 ராணுவத்தளகர்த்தர்களை, ருமேனியச் சர்வாதிகாரி, ஜெனரல் ஆண்டனெஸ்கோ, சுட்டுவிடும்படி கட்டளையிட்டார்.

63 வயதான பிரிட்டிஷ் என்ஜினீயர், மிஸ்டர் கிளார்க், ருமேனியாவில் பட்ட கஷ்டங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார். அவருடைய தலையில் ஆப்பிள் பழத்தைவைத்து ஜெர்மன் சிப்பாய்கள் வேடிக்கையாக சுடுவார்களாம். இரண்டு கால்களையும் மேலே கட்டிவிட்டு அந்தக் கால்கள் ரணமாகும் வரைக்கும் அடிப்பார்களாம். இவரும் இதர பிரிட்டிஷார்களும், சர் ரெஜினால்டு ஹோர் அவர்களின் முயற்சியினால் கடைசியில் விடுவிக்கப்பட்டார்கள்.

யூகோஸ்லாவியா

யூகோஸ்லாவியாவில் இன்னும் குரங்குச் சண்டைகள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. யூகோஸ்லாவிய மக்கள் அடிக்கடி ஜெர்மன் சிப்பாய்களைத் தாக்கிப் போர்புரிகிறார்கள். குரோஷியாவில், ஜெர்மானியர்கள் அட்டூழியங்கள் செய்கிறார்கள். ஏராளமான மக்கள் தூக்கிலிடப்படுகிறார்கள், அல்லது சுடப்படுகிறார்கள். அதிகாரிகளிடம் தங்களைப் பதிவு செய்துகொள்ளாத காரணத்துக்காக, இரண்டு பேர் தூக்கிலிடப்பட்டார்கள். சாகரெப் மத்திய தபாலாபீசில் வெடிகுண்டு விபத்து ஒன்று நடந்தது. அதற்காக அநேகரைக் கொன்றார்கள். இதில் சுடப்பட்டவர்களில் 50 பேர் யூதர்கள்.

கிரீஸ்

ஜெர்மானியர்களுடைய ஆட்சியிலிருந்து கிரீசை விடுதலை செய்வதற்காக, ஒரு இயக்கம் வளர்ந்துக் கொண்டு வருகிறது. ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் அதிக கொடூரமாக நடந்து வருகிறார்கள். கிரீஸ் மக்கள் சுவர்களில் "பிரிட்டிஷ் விமானப்படை" என்று எழுதுகிறார்கள். வழியில் போகிறவர்களை அதை நாக்கினால் நக்கி அழிக்கும்படி ஜெர்மானியர்கள் அடிக்கிறார்கள். கிரேக்க பொம்மை அரசாங்கத்துக்கு விரோதமான உணர்ச்சி பலப்படுகிறது.

ஷீயாஸ் என்பது ஒரு கிரேக்கத்தீவு. அந்தத் தீவில் உள்ள செம்படவர்களை ஜெர்மானியர்கள் துன்புறுத்திவருகிறார்கள். செம்பு, அலுமினியம் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட சமையல் பாத்திரங்களைக் கொடுக்காததற்காக, மூன்று பெண்களும் நான்கு ஆண்களும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். நூற்றுக்கு அதிகப்பட்டவர்கள் கொடூரக் கொட்டடியில் அடைக்கப்பட்டார்கள். இவ்வளவு கொடுமை செய்தபோதிலும். ஜெர்மானியர்களின் உத்தரவைக் கீழ்ப்படியாமல் அநேகர் நடந்துவருகிறார்கள்.

ரஷ்ய யுத்தமும், மழைக்கால நெருக்கமும்
லெனின்கிராடின் திறமையான எதிர்ப்பு
மாஸ்கோவில் வல்லரசுகள் மகாநாடு
பிரிட்டிஷ்—அமெரிக்க உதவி : இரானுடன் ஒப்பந்தம்

ரஷ்யாவில் யுத்தம் ஆரம்பித்து 15 வாரங்களாகின்றன. 2,000 மைல் தூரம் சண்டை நடக்கிறது. லட்சக்கணக்கான சிப்பாய்கள் இந்தப் பெரிய யுத்தத்தில் போராடுகிறார்கள். ரஷ்யர்களுடைய பிரதேசங்களை ஜெர்மானியர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள்; சிப்பாய்களும், யுத்த சாமான்களும் ரஷ்யாவுக்கு நஷ்டமாய்க் கொண்டுவருகின்றன. இருந்தபோதிலும் ரஷ்ய யுத்த முனைத் தொடர்ச்சியை ஜெர்மானியர்களால் உடைக்க முடியவில்லை; ரஷ்யர்களுடைய எதிர்த்துத் தாக்கும் பலமும் குறைந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் ரஷ்யா ஒரு நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது என்ற விஷயத்தை உணரவேண்டும். மழைக்காலம் வருவதற்குள் ரஷ்ய பலத்தை அழித்துவிடவேண்டும் என்பது ஜெர்மனியின் நோக்கம். அதற்காக ஏராளமான யுத்த சாமான்களையும், ஜெர்மன் சிப்பாய்களையும், ஜெர்மனி ரஷ்யாவில் பாழாக்கிக்கொண்டுவருகிறது. எவ்வளவு நஷ்டமானாலும் சரி, ரஷ்யாவின் நிலக்கரிச் சாலைகள், பெ ரோல் எண்ணெய்க் கிணறுகள், தொழிற்சாலைப் பிரதேசங்கள் முதலியவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்று ஜெர்மனி ஆசைப்படுகிறது. மழைக்காலத்தில், வெளியிலிருந்து ஜெர்மன் துருப்புகளுக்கு உணவுப் பொருள் முதலியன வரவேண்டியிருக்கிறது. ஏனென்றால், ரஷ்யாவில் எல்லா உணவுச் சாமான்களும், பயிர் பச்சைகளும் ஜெர்மானியர்கள் கையில் அகப்படுவதற்குமுன் கொளுத்தப்படுகின்றன. மழைக்காலத்துக்குப் பின் சண்டையை நடத்துவதென்றால், அதற்குள் ரஷ்யாவுக்கு அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் உதவி வந்துகொண்டேயிருக்கும். அதனால் ரஷ்ய பலம் அதிகரிக்கும். அதற்குமுன் ரஷ்யாவைத் தோற்கடித்து விடவேண்டும் என்று ஜெர்மனி பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

ஜெர்மனியின் மூன்றாவது தாக்குதல் கடூரமாகத்தான் இருக்கிறது. ரஷ்யர்களுடைய எதிர்த்தாக்குதலாலும், ரஷ்ய மழைக்காலத்தாலும் தான் அது தடைப்படுத்தப்படும் போலிருக்கிறது. இந்த சமயத்தில், லண்டனில் உள்ள ரஷ்ய ஸ்தானீகர், மிஸ்டர் மேஸ்கி கூறிய எச்சரிக்கையை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். நவீன யுத்த தளவாடங்கள் இருக்கும் நிலையில் மழைகாலம் அவ்வளவு கஷ்டமான காலமல்ல என்று அவர் சொல்லுகிறார். இதனால் மழைகாலத்திலும் யுத்தம் ஜெர்மானியர்கள ல் கடுமையாக நடத்தப்படும் என்று தெரிகிறது. அப்போது ரஷ்ய பட்டாளத்தின் பளுவு அதிகமாயிருக்கும்.

மூன்று பகுதிகளில் யுத்தம்

ரஷ்ய யுத்தத்தில் சில விஷயங்கள் விளக்கமாகத் தெரிகின்றன. வடக்கில் லெனின்கிராட் ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடி வருகிறது. மார்ஷல் வாரஷிலோவின் துருப்புகள் முன்னேறி ஜெர்மானியர்களைத் தாக்கி விரட்டுகின்றன. இல்மென் ஏரிக்குத் தெற்கில் ஜெர்மானியர்கள் பின் தள்ளப்பட்டார்கள். லெனின்கிராடை நேர்முகமாகத் தாக்கி கைப்பற்றுவதென்பது நடக்காத காரியம்.

மத்தியப் பகுதியில் மார்ஷல் தீயோஷெங்கோவின் துருப்புகள் ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. எல்நியா என்ற இடத்துக்கு அருகில் உள்ள பல இடங்களை அவைகள் திரும்பக் கைப்பற்றிக்கொண்டன.

தெற்கில் தான் நிலைமை சற்று கவலைக்கிடமாய் இருக்கிறது. கீயப்பை ஜெர்மானியர்கள் கைப்பற்றியது ஒரு பெரிய நஷ்டம். அங்கிருந்து கார்கோவ் என்ற தானியப்பட்டணத்துக்கு ஜெர்மானியர்கள் நேராகச் செல்லலாம். வழியில் இயற்கைத் தடைகள் யாதொன்றும் இல்லை. கிழக்கு யூக்ரேயினைப் பிடிப்பதற்காக இப்போது ஜெர்மானியர்கள் முயற்சி செய்கிறார்கள். டோனெட்ஸ் பேசின் என்ற பிரதேசத்தையும், கிரைமியாவையும் கைப்பற்ற ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். மார்ஷல் புடானி, கார்கோவ் என்ற இடத்திற்குத் தன்னுடைய துருப்புகளைக் கொண்டுபோயிருக்கிறார். ஓடெஸ்ஸா என்ற ரஷ்யத் துறைமுகப்பட்டணம் எதிரிகளுடைய தாக்குதலைத் தடுத்து, அவர்களுக்குப் பலத்த சேதத்தை உண்டாக்கியிருக்கிறது.

ஜெர்மானியர்களின் பரபரப்பு

ஜெர்மானியர்கள் மிக அவசரமாக வேலை செய்து வருகிறார்கள். கிரைமியா தீபகற்பத்தில், ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. கருங்கடல் வழியாக, பெட்ரோலுக்குப் பேர்போன காகசஸ் பிரதேசத்தின்மேல் ஒரு பெரிய படையெடுப்பு நடத்தப்போவதாக ஜெர்மனி தீர்மானித்திருக்கிறது. நடைபெறும் விஷயங்களைப் பார்த்தால், இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இதனால், ரஷ்யாவின் பெட்ரோல் சப்ளையைக் குறைத்துவிட்டு, தன்னுடைய பெட்ரோல்-சௌகரியங்களை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் ஜெர்மனி வேலைசெய்கிறது. ஆனால் கருங்கடலில் ரஷ்ய கப்பற்படை பலம் இருக்கும் வரைக்கும் ஜெர்மானியர்கள் அங்கு அதிகமாக ஒன்றும் செய்துவிடமுடியாது.

ஜெர்மானியர்கள் துருக்கியை அதிகமாகக் கஷ்டப்படுத்துகிறார்கள். பல்கேரியாவைக் கட்டாயப்படுத்தி ரஷ்யர்களோடு சண்டை போடும்படி தூண்டுகிறார்கள். துருக்கி இப்போதிருக்கிற நிலைமையில் ஜெர்மனிக்குப் பயப்படவேண்டியதேயில்லை. முன்போல சுற்றி வளைத்துக்கொள்ளப்பட்ட நிலையில் அது இல்லை. துருக்கியின் மூன்று எல்லை யோரங்களில் வேண்டும்போது உதவி செய்வதற்காக பிரிட்டிஷ் துருப்புகளும், ரஷ்யத் துருப்புகளும் இருக்கின்றன.

ரஷ்யாவுக்குப் பூரண உதவி செய்யவேண்டியதன் அவசியத்தை மிஸ்டர் சர்ச்சில் சென்றவாரம் பார்லிமெண்டு சபையில் வற்புறுத்திக் கூறினார். மாஸ்கோவில் மூன்று வல்லரசுகள் மகாநாடு கூடி செய்யவேண்டிய வேலையைத் துரிதமாகச் செய்துமுடித்துவிட்டது. ரஷ்யாவுக்கு யுத்த உதவிச் சாமான்கள் போய்க்கொண்டே யிருக்கின்றன. ரஷ்ய விமானங்களுக்குப் பெட்ரோல் எண்ணெய் அனுப்பப்படுகிறது. பிரிட்டனிலிருந்து டாங்கிகள் ஏராளமாக அனுப்பப்படுகின்றன. பிரிட்டிஷ் விமானப் படையின் ஒரு பகுதி ரஷ்ய யுத்தத்தில் தீவிரமாகப் போராடிக் கொண்டு வருகிறது.

மாஸ்கோ மகாநாடு

உலகமெல்லாம் மாஸ்கோ மகாநாட்டின் முடிவுகளை வரவேற்று, ரஷ்யாவுக்கு இன்னும் அதிகமான

உதவி அனுப்பவேண்டுமென்று விரும்புகிறது. ரஷ்யத் துறைமுகப் பட்டணமாகிய மூர்மான்ஸ்க் எதிரிகள் கையில் அகப்படாமல் எதிர்த்துப் போராடுகிறது. அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வரும் சாமான்கள் இரான் மூலமாக, ரஷ்ய யுத்த முனைக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தியாவின் பிரதம தளகர்த்தரான ஜெனரல் வேவெல், லண்டனுக்குச்சென்று பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுடனும், பிரிட்டிஷ் மந்திரி சபையுடனும் கலந்து பேசிவிட்டு, இரானுக்கு வந்தார். அங்கு ரஷ்ய தளகர்த்தரிடமும், மத்திய கிழக்கரங்கத்து தளகர்த்தர், ஜெனரல் ஆக்கின்லெக்கிடமும் பேசினர். ரஷ்யாவின் தெற்கு முனைக்கு ஒரு பிரிட்டிஷ் பட்டாளம் அனுப்பவேண்டுமென்று பொது மக்கள் அபிப்பிராயம் பலமாக இருக்கிறது. ஆனல் பிரிட்டிஷ் தளகர்த்தர்களுக்கு என்ன செய்யவேண்டுமென்பது நன்ருகத் தெரியும். இப்போது ஒரு காரியம் துரிதமாக நடைபெறவேண்டும். பாரசீகக் குடாக்கடல் மூலமாகவும், இரான் மூலமாகவும், ரஷ்யாவுக்கு அதிகமான உதவி அனுப்பப்படவேண்டும். இதற்காக, பிரிட்டனும், ரஷ்யாவும், இரானுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதாக மிஸ்டர் சர்ச்சில் அறிவித்தார்.

"ரஷ்யாவுக்கு அதிக உதவி கொடுத்துக்கொண்டே வரவேண்டும்"

மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம்

"வசந்தகாலத்தில்யுத்தம் வலுக்கும்"

பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், சென்ற செவ்வாய்க்கிழமை, காமன்ஸ் சபையில் யுத்த நிலைமையைப்பற்றிப் பேசினர். அவருடைய பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

ஜூலை, ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்களில் நேச தேசக் கப்பல்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறைந்திருக்கிறது. அதற்கு முந்திய மூன்று மாதங்களில் ஏற்பட்ட சேதத்தில் மூன்றில் ஒரு பாகம் தான் சேதமாயிருக்கிறது. ஆனல் எதிரிக்கப்பல்களுக்கு அதே காலத்தில், ஒன்றரை மடங்கு அதிகச் சேதம் உண்டாக்கப்பட்டது. அமெரிக்காவில் புதிய கப்பல்கள் கட்டும் வேலை துரிதமாக நடந்துவருகிறது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் புதிதாகக் கட்டப்படும் கப்பல்களைச் சேர்த்தால் 1942-ம் வருஷத்திலும், அதன் பின் யுத்தம் முடியும்வரையிலும் சமாளித்துக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பிரிட்டன் முன்போல இப்போது தனியாயில்லை. பிரிட்டனின் உறுதியான நடத்தையாலும், எதிரிகளின் அக்கிரமங்களினுலும் இரண்டு பெரிய நாடுகள் பிரிட்டனேடு உறவு கொண்டாடுகின்றன. ரஷ்யாவின் படைகள் வீரத்துடன் எதிர்த்துப் போராடி வருவதும், அமெரிக்காவின் பேருதவியும் நமக்கு விசேஷ உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றன. நாம் ஆபத்துக்குழியிலிருந்து எழுந்து மேலே வந்துவிட்டோம். ரஷ்யாவும், அமெரிக்காவும் நாம் கொண்டுள்ள நோக்கத்துடன் மும்முரமாக வேலை செய்கின்றன. ஐரோப்பாவில், ஜெர்மனியால் அடிமைபடுத்தப்பட்ட நாடுகள் தைரியமாகக் கிளர்ச்சி செய்ய முன் வந்துள்ளன. கிழக்குக் கோடியில் சீன தேசத்து மக்கள் சளைக்காமல், சோர்வடையாமல், தங்களுடைய சுதந்தரத்துக்காகப் போராடி வருகிருர்கள்.

ஹிட்லர் ரஷ்யாவுடன் போர் செய்துகொண்டிருக்கும் இந்த சமயத்தில் ஜெர்மனியின் மேற்கு எல்லையைத் தாக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி உபயோககரமான வார்த்தை எதுவும் சொல்வதற்கில்லை. இது சம்பந்தமாக ரகசியமான ஏற்பாடுகள் நடப்பதாகச் சொன்னுல், அதனல் எதிரிகளுக்கு அனுகூலம் ஏற்படும். படையெடுக்க உத்தேசமில்லை என்று கூறி, அதற்காக வேண்டிய காரணங்களைச் சொன்னுல், ஹிட்லருக்கு நாம் சௌகரியமான உறுதிமொழி கூறியவர்களாவோம். நம்முடைய எதிரிகள் தங்களுடைய மனதில் இருக்கும் ரகசியங்களை நமக்குக் கூறுவதில்லை. சென்ற பிப்ரவரி மாதம் பேசிய ஹிட்லர் இதுவரைக்கும் ஒரு வார்த்தையும் வெளிப்படையாகப் பேசவில்லை. ரஷ்யாவில் தீவிரமான போர் நடக்கிறது. ஜெர்மானியர்களுக்கு மகத்தான சேதம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. ஜெர்மானிய மக்கள் இன்னும் எவ்வளவு காலம் இப்படிப்பட்ட சேதங்களைச் சகித்துக்கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

ரஷ்யாவுக்காகத் தியாகம்

ரஷ்யாவுக்கு உதவிசெய்வதன் சம்பந்தமாக, மாஸ்கோவில் ஒரு மகாநாடு கூடியது. பிரிட்டிஷ் பிரதிநிதிகளும், அமெரிக்கப் பிரதிநிதிகளும், ரஷ்யத் தலைவர்களுடன் கலந்து பேசிவருகிருர்கள். முன்னமேயே பல முக்கியமான யுத்த தளவாடங்கள் ரஷ்யாவுக்கு அனுப்பட்டன. எந்த அளவுக்கு வெளியிலிருந்து உதவிகிடைக்கும் என்ற விஷயம் ரஷ்யாவுக்கு அவசியம் தெரியவேண்டும். அப்போதுதான், ரஷ்யா தன் வசமுள்ள யுத்த தளவாடங்களை அதிகப் பிரயோசனமான முறையில் உபயோகிக்கமுடியும். ரஷ்யா இதுவரை செய்ததுபோல், இனிமேலும் கால வறையரை யில்லாமல் தீவிரமாகப் போராடிக்கொண்டிருப்பதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். பிரிட்டிஷ்மக்கள் இன்னும் அதிகமான தியாகம் செய்து தங்களுடைய முயற்சியை மும்முரமாக்கவேண்டும். அமெரிக்காவில் உள்ள பல தொழிற்சாலைகளை திருத்தியமைப்பதுடன் ஏராளமான புதிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும்.

ரஷ்யாவின் உதவிக்காக, "டாங்கி உற்பத்திவாரத்தை"க் கொண்டாடி முடித்திருக்கிரேம். டாங்கிகள் மட்டுமல்ல, சிறந்த விமானங்கள், அலுமினியம், ரப்பர், செம்பு, பெட்ரோல் எண்ணெய், நவீன யுத்தத்துக்கு வேண்டிய இதர யுத்தப்பொருள்கள் முதலியவற்றை நாம் ரஷ்யாவுக்கு அனுப்பவேண்டும். ஏராளமான பொருள்களை நாம் எற்கனவே அனுப்பியிருக்கிரேம். ஆனல் அதுபோதாது ; மேலும் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருக்க வேண்டும்.

இடையில் என்ன நடந்தாலும் சரி, வருகிற வசந்தகாலத்தில் போராட்டம் வலுக்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். கிழக்கு அரங்கத்தில் போராட்டம் அதிகமாக வலுக்கும். பிரிட்டிஷ் தீவுகள் சம்பந்தப்பட்ட வரையில், படையெடுப்புப் பயம் அதிகமாகலாம். ஆனல் நாம் ஒன்றுபட்டு உறுதியுடன் இருந்தால், எப்படிப்பட்ட கடுமையான தாக்குதலையும் தாங்கி சமாளித்துக்கொள்வதற்கு முடியும்.

தோப்ருக்கில் இந்திய குதிரைப்படை

பிரதம தளகர்த்தரின் பாராட்டு

தைரியமான பாதுகாப்பு: திறமையான எதிர்ப்பு

சில நாட்களுக்குமுன், 18-வது இந்திய குதிரைப் பட்டாளம் தோப்ருக்கிலிருந்து அனுப்பப்பட்டது. தோப்ருக் என்பது வட ஆப்பிரிக்காவில் ஒரு முக்கியமான இடம். இந்த இடத்தைக் கைப்பற்றுவதற்கு இத்தாலியர்களும், ஜெர்மானியர்களும், பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். அவர்களுடைய முயற்சி கைக்கூடவில்லை. சென்ற ஐந்து மாதங்களாக, 18-வது இந்திய குதிரைப்பட்டாளம் தோப்ருக்கைப் பாதுகாக்கும் பொறுப்பிலும் கௌரவத்திலும் பெரிய பங்கு எடுத்துக்கொண்டு இருக்கிறது.

எகிப்து தேசத்து ஓய்வு முகாமுக்கு இந்தப் பட்டாளம் வெற்றிக் கோலத்துடன் போயிருந்தது. அப்போது மத்திய கிழக்கு அரங்கத்தின் பிரதம தளகர்த்தர், சர்கிளாட் ஆக்கின்லெக், இந்திய குதிரைப்

பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் ‘ பிரின்ஸ் ஆப் வேல்ஸ் ’



இதன் எடை 35,000 டன் ; இது ‘கிங் ஜார்ஜ் V’ என்னும் யுத்தக் கப்பலைப் போன்றது ; இதன் நீளம் 740 அடி; இதில் 14 அங்குலம் துப்பாக்கிகள் பத்தும், 15·25 அங்குலம் துப்பாக்கிகள் பதினாறும் பொருத்தப்பட்டுள்ளன ; இதில் பல விமான எதிர்ப்பு பீரங்கிகளும் உள்ளன. இதில் 1,500 பேர்கள் வேலை செய்கிறார்கள்.

படை சிப்பாய்களைச் சந்தித்தார். எல்லோரும் போருக்கு ஆயத்தமாகத் தைரியத்துடனும், பலத்துடனும் விளங்கினார்கள். தோப்ரூக்கை மிகுந்த திறமையுடன் பாதுகாத்த இந்திய சிப்பாய்களின் வீரத்தைக் கண்டு உலகம் பாராட்டி மகிழ்ந்தது என்று சர்கிளாட் ஆக்கின்லெக் கூறினார்.

18-வது இந்திய குதிரைப்பட்டாளம் சிரிநெய்கா யுத்தத்தில் புகழ்பெற்றுள்ளது. வடக்கு ஆப்ரிக்காவில் சிரிநெய்கா மாகாணத்தில் மெச்சிலி என்ற இடத்தில் ஜெர்மனியத் துருப்புகளும், இத்தாலியத் துருப்புகளும் ஒன்று சேர்ந்து இருந்தன. ஒரு பெரிய மோட்டார் படை அவர்களை எதிர்த்து நின்றது. அந்த மோட்டார் படையோடு 18-வது இந்தியப் பட்டாளமும் சேர்ந்திருந்தது. பென்காசியிலிருந்து திரும்பிச்செல்லும் பிரிட்டிஷ் துருப்புகளையும், ஆஸ்திரேலியத் துருப்புகளையும் தடுப்பதற்காக எதிரித் துருப்புகள் முயற்சி செய்தன. எதிரிகளுடைய முயற்சி நிறைவேறாமலிருந்ததற்கு இந்தியப் பட்டாளம் பெரிய உதவி செய்தது. இந்தப் பட்டாளத்தின் ஒரு பகுதி எதிரிகளுடைய பீரங்கிகளை எதிர்த்து முன்னேறிச் சண்டை செய்தது. இந்த சண்டை நடந்துகொண்டிருக்கும்போது, பென்காசித் துருப்புகள் யாதொரு சேதமும் இல்லாமல் போய்விட்டன. இதற்குப் பிறகு, தோப்ரூக்குக்குச் சென்று மற்றப் பட்டாளத்துடன் இந்தப் படை சேர்ந்துகொண்டது.

பலவிதமான வேலை

தோப்ரூக்கிலிருந்த மோட்டார் படை கோட்டையைக் காக்கும் வேலையைத் திறமையாகச் செய்தது. இந்திய குதிரைப் படையும் இதில் பாராட்டும்படியான உதவியைச் செய்தது. குதிரைப் படை சிப்பாய்கள் சகலவிதமான வேலையையும் செய்தார்கள். காலாட்படை வேலை, போர்க்கள பீரங்கிக்காரர் வேலை, விமான எதிர்ப்பு பீரங்கிக்காரர் வேலை, ரோட்டு முதலியன செப்பனிடும் வேலை, உலைக்களத்தில் உதவி செய்யும் வேலை, முதலிய பலவித வேலைகளைக் குதிரைப் படையாளர்கள் செய்தார்கள்.

தோப்ரூக் படையின் எதிர்த்துத் தாக்கும் வீரத்தைப் பற்றி அநேகர் புகழ்ச்சியாக எழுதியிருக்கிறார்கள். இது உண்மைதான் ; உண்மையை அதிகப்படுத்திக் கூறியதல்ல. ஒவ்வொரு இரவும் எதிரிகள் தாக்கிக்கொண்டே இருந்தார்கள். அவர்களை அடிக்கடி திடீரென்று தாக்குவது, வேறு தந்திர முறைகளால் அவர்களைக் களைத்துப்போகும்படி செய்வது, முதலிய திட்டங்களை எல்லாம் போட்டு, அவைகளை நிறைவேற்றிவைக்கும் வேலையில் நமது சிப்பாய்கள் உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் காட்டினார்கள்.

18-வது குதிரைப் படையில் காங்கண்ணி, ராஜபுத்திரர், ஜாட்டியர்கள் முதலிய வகுப்புகளைச் சேர்ந்த பல சிப்பாய்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தோப்ரூக்கை விட்டுப் போவதற்கு இஷ்டமே இல்லை. ஏனென்றால், எதிரிகளுக்குத் தொந்தரவு கொடுப்பதில், பிரிட்டிஷ் துருப்புகளும், ஆஸ்திரேலியத் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், ஒன்றோடொன்று பந்தயம் போட்டுக்கொண்டு வேலை செய்தன. இதல்லாமல், கடலில் குளிப்பது மிகவும் ரம்மியமாயிருந்தது. தோப்ரூக்கில் தண்ணீர் கொஞ்சம் உப்புக்கரித்தாலும், நல்ல உணவுப் பொருள்கள் அகப்படும்படியான இடம்.

சந்தோஷமான வாழ்க்கை.

தோப்ரூக்கில் இருக்கும் வீரர்களை நான்கு பக்கமும் சூழ்ந்து சிறைப்படுத்திவிட்டதாக எதிரிகள் கூறுகிறார்கள். இது உண்மையல்ல. தோப்ரூக்கிலிருந்து நீங்கிச் செல்வதற்குமுன், இந்திய பட்டாளத்தை ஒருவர் போய்ப் பார்த்தார். அவர் கூறுவதைக் கவனித்தால், நமது சிப்பாய்கள் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்களென்றும், எதிரிகள் கூறுவது முழுப் பொய்யென்றும் புலப்படும். அவர் கூறுவதாவது :

“ நான் தோப்ரூக்கில் சண்டை நடக்கும்போது நேரில் பார்த்தேன். இத்தாலியர்கள் நமது துருப்புகளால் தாக்கப்பட்டார்கள். தாங்கள் ஒளிந்திருந்த இடத்திலிருந்து மெதுவாக நழுவி அவர்கள் போவதைக் கண்டேன். இந்தியக் குதிரைப் படை சிப்பாய்கள் சிரித்துக்கொண்டே, வேடிக்கையாக, மிகக் கடினமான யந்திர பீரங்கியை உபயோகிப்பதைக் கண்டேன். இந்தியப் படையைச் சேர்ந்த ஒரு சிறு உத்தியோகஸ்தர் தளகர்த்தர் வேலையைச் செய்வதையும் கண்டேன். சதாகாலமும் தளகர்த்தராக இருந்து அனுபவம் பெற்றவர்கள் எப்படி நடப்பார்களோ, அப்படி அவர் நடந்துகொண்டார்.”

தோப்ரூக்கைப் பாதுகாத்ததில் பங்கெடுத்துக் கொண்ட இந்திய குதிரைப் படை இந்தியாவுக்கு பெருமையும், புகழும் கொண்டுவந்திருக்கிறது.

வாரச் செய்திக் குறிப்புகள்

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்.

பிரிட்டிஷ் விமானப்படையில் சேர்ந்துள்ள இந்திய விமான ஓட்டிகள் திறமையாக வேலை செய்து வருகிறார்கள் என்று சென்ற வாரத்தில் வெளியான ஒரு செய்தி கூறுகிறது. சுமார் ஒரு வருஷத்துக்கு முன் 22 இந்திய விமான ஓட்டிகள் பயிற்சி செய்யப்பட்டு, பிரிட்டிஷ் விமானப்படையில் சேர்க்கப்பட்டார்கள். இதில் 16 பேர் சென்ற சில மாதங்களாக தினந்தோறும் ஜெர்மனியின்மேல் பறந்து வெடிகுண்டுகளால் முக்கியமான இடங்களைத் தாக்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய படைத் தலைவர் அவர்களுடைய வேலையைப் பாராட்டிக் கூறியிருக்கிறார். முக்கியமாக, ஒரு சீக்கியர் சிறந்த வேலை செய்ததாகச் சொல்லப்படுகிறது. 22 இந்திய விமான ஓட்டிகளில் 6 பேர் இறந்துவிட்டார்கள்; அதில் 4 பேர் விமானப்போரில் இறந்தார்கள்.

சென்ற வாரம், பால்டிக் பிரதேசத்தில் ஜெர்மனியின் முக்கியமான கடற்படைத்தளமாகிய ஸ்டெட்டின், பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்களால் தாக்கப்பட்டது. பெருந்தீ கீழே எரிவது தெரிந்தது. மற்றொரு வெடிகுண்டு படை ஹாம்பர்க்கில் உள்ள கப்பற்சாலையைத் தாக்கியது. இதல்லாமல், சேர்பர்க், ஹூஹேவர் முதலிய கப்பற்சாலைகளும் தாக்கப்பட்டன.

ஸ்டெட்டின்மேல் செய்யப்பட்ட விமானத் தாக்குதல் மிகுந்த பலம் பொருந்தியது என்று சொல்லப்படுகிறது. இதில் பிரிட்டனில் புதிதாகச் செய்யப்பட்ட வெடிகுண்டு விமானங்களும் கலந்துகொண்டன. இந்தத் தாக்குதல் வெற்றிகரமான தாக்குதல்களில் ஒன்று என்று தெரிகிறது. ஜெர்மனி ரஷ்யாவின் மேல் படையெடுத்ததிலிருந்து, பிரிட்டிஷ் விமானப் படை, ஸ்டெட்டின் கடற்படை தளத்தின்மேல் கண்ணோட்டம் வைத்துக்கொண்டு வந்தது. ரஷ்யாவுக்கு ஏராளமான பிரிட்டிஷ் விமானங்கள் போய்க் கொண்டேயிருக்கின்றன. ரஷ்யாவில், அதாவது கிழக்கு யுத்த முனையில், பிரிட்டிஷ் விமானப்படை ஜெர்மனிக்கு எதிராகப் போர் புரிகிறது. இதல்லாமல், வழக்கம்போல மேற்கிலிருந்து ஜெர்மனியைத் தாக்கியும் வருகிறது. ஆகவே, கிழக்கிலும், மேற்கிலும், ஜெர்மனி பிரிட்டிஷ் விமானப்படையின் பலத்துக்குப் பதில் சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற திங்கட்கிழமை, ஜெர்மனியின் வடக்குக் கரையோரப் பிரதேசத்தின்மேலும், ஜெர்மனியின் தலைநகரமாகிய பர்லினின் சுற்றுப்பக்கங்களிலும், எதிரி ஆகாய விமானங்கள் பறந்ததாக ஜெர்மன் ராணுவக் காரியாலயம் ஒப்புக்கொள்ளுகிறது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள பிராங்போர்ட் முதலிய முக்கியமான இடங்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. இத்தாலியில் உள்ள ஜினோவா, தூரின் முதலிய இடங்களின்மேல் பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் விழுந்தன. ஜினோவாவில் தொழிற்சாலைப் பிரதேசங்கள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன; அங்குள்ள கப்பற்சாலைகள் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்தன. பிரான்சிலுள்ள செயிண்ட் நாசேர் என்ற இடத்தில் இருக்கும் பெட்ரோல் டிபாக்களும், பெட்ரோல் சுத்தம் செய்யும் சாலைகளும், பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

செப்டெம்பர் மாதம் 28-ந் தேதி விடியற்காலையோடு முடியும், பிரிட்டிஷ் விமானப்போரின் ஒருவார விவரங்கள் சென்ற வாரம் வெளியிடப்பட்டன. கோங்னேயிலுள்ள மின்சார சாலை, ஊல் என்ற இடத்திலுள்ள ரயில்வே லட்சியங்கள், கலே, டங்கர்க், பலோன் முதலிய இடங்களிலுள்ள கப்பல் கட்டும் சாலைகள், அமீன்ஸ் ரயில்வே சாலை, பொஸ் என்ற ரயில்வே ஜங்ஷன், கலோனிலும், மேற்கு ஜெர்மனியிலும் உள்ள முக்கியமான லட்சியங்கள்—இவைகளின்மேலெல்லாம் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டு மழை பொழிந்தன. மேலே குறிப்பிட்ட வாரத்தில் 45 ஜெர்மன் போர் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 28 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன; இதில் 5 விமான ஓட்டிகள் உயிர் தப்பினார்கள்.

வடகிழக்கு இங்கிலாந்தில் விரோதி விமானம் சில குண்டுகளைப் போட்டன. ஒரு விரோதி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. உயிர்ச்சேதமொன்றுமில்லை.

2. இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்

சென்ற எப்ரல்மீ 15-ந் தேதியிலிருந்து அபிஸீனியாவிலுள்ள வொல்கிபிட் என்ற இடம் முற்றுகையிடப்பட்டது. அங்குள்ள இத்தாலிய துருப்புகள் அன்ன ஆகாரமின்றி அநேக நாட்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தன, பிறகு சென்ற செப்டெம்பர்மீ 26-ம் தேதி சண்டை போடுவதை நிறுத்திவிட்டார்கள்.

ஆப்பிரிக்காவில், ஈஜிப்டின் வட கடற்கரையிலுள்ள மெர்ஸ மாட்ரு என்ற பட்டணம், இத்தாலி யுத்தத்தில் இறங்கியதிலிருந்து, அதனால் பலமாகத் தாக்கப்பட்டுவந்தது. ஈஜிப்டிற்கு வரும் தென் ஆப்பிரிக்க துருப்புகள் உடனே இந்த இடத்திற்கு அனுப்பப்படுகின்றன. சென்ற நான்கு மாதங்களாக இந்த இடம் தென் ஆப்பிரிக்க துருப்புகளால் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

சென்ற வாரத்தில், தொப்ரூக் நிலைமையில், மாறுதலொன்றுமில்லை. லிபியாவின் துறைமுகப் பட்டணங்களாகிய திரிபோலியும், பெங்காசியும் பிரிட்டிஷ் ஆகாயப்படையால் பலமாகத் தாக்கப்பட்டன. இதனால் சேதம் அதிகம் என்று மத்திய கிழக்குப் பிரதேச அறிக்கை கூறுகிறது.

அபிசீனியாவில், டெஸ்பரே என்ற இடத்திலுள்ள விரோதி துருப்புகள் மீது பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை இயந்திர துப்பாக்கியினால் விடாமல் சுட்டது.

கிழக்கு மத்தியதரைக்கடலில், பிரிட்டிஷ் சண்டைக் கப்பலிலிருக்கும் ராய்ட்டரின் நிருபர், சென்ற வெள்ளி, சனிக்கிழமை தினங்களில் கிழக்கு மத்தியதரைக் கடலில், விரோதி கப்பலொன்றுகூடத் தலைகாட்டவில்லை என்று தெரிவிக்கிறார்.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்கா கூடிய சீக்கிரம் இந்த யுத்தத்தில் பிரவேசிக்கும் என்று தென்னாப்பிரிக்காவின் முதல் மந்திரி, தளகர்த்தர் ஸ்மட்ஸ், சென்றவாரம் கூறியிருக்கிறார். அமெரிக்காவின் ஏராளமான பலமெல்லாம் ஒன்றுசேர்க்கப்பட்டு யுத்த உதவி முயற்சிக்கு இப்போது கொடுக்கப்பட்டுவருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் அரசியல் மந்திரி, மிஸ்டர் கார்டெல் ஹல், நடுநிலைமைச் சட்டத்தைத் திருத்துவதை விரும்புவதாக் கூறியிருக்கிறார். அடியோடு சட்டத்தை ரத்து செய்வதைவிட, அதைத் திருத்துவது சுலபமாக அடையக்கூடிய காரியம் என்று அவர் விளக்கிக் கூறினார்.

நடுநிலைமைச் சட்டத்தை ரத்து செய்துவிடவேண்டும் என்று அமெரிக்க சட்டசபை அங்கத்தினர், மிஸ்டர் கென்னெத் மாக்கெல்லர், ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

"சுதந்தரக் கப்பற்படை நாள்" அமெரிக்காவில் சென்ற சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. அப்போது 14 புதிய கப்பல்கள் கடலில் மிதக்க விடப்பட்டன. ஒரே நாளில் இவ்வளவு கப்பல்கள் மிதக்க விடப்பட்டது இதுதான் முதல் தடவை. அப்போது பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஏராளமான கப்பல்கள் வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறினார். அவர் கூறியதாவது:—

"நாம் செய்துள்ள காரியத்தைப்பற்றி சந்தோஷப்படுகிறோம். ஆனால் இதுவே போதும் என்று நிம்மதியாய் இருப்பதற்கு இதுகாலமல்ல. நாம் சாமான் கப்பல்கள் கட்டவேண்டும்; அதிகமான சமான் கப்பல்கள் கட்டவேண்டும்; இன்னும் அதிகமான சாமான் கப்பல்கள் கட்டவேண்டும். நம்முடைய வேலைத் திட்டத்தின் வேகத்தை அதிகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு நாளும், ஒரு கப்பல் கடலில் மிதக்க விடும்படியான வேகத்தை அடையவேண்டும். அதற்குப் பிறகு நாளுக்கு இரண்டு கப்பல்கள் விடவேண்டும். ஒவ்வொரு புதிய கப்பலும் உலக சுதந்திரத்துக்கு எதிரிடையாக உள்ள அபாயத்துக்கு ஒரு அடி கொடுக்கிறது."

4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில், ரஷ்ய ஆகாயப்படையுடன் பிரிட்டிஷ் விமானப்படையும் சேர்ந்து வேலைசெய்கின்றது. இதனால் சென்ற சில தினங்களுக்குள் 26 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் சுட்டு வீழ்த்தியது 7 விமானங்கள்.

பல்கேரிய துருப்புகளை ரஷ்ய போர்முனைக்கு அனுப்ப வேண்டுமென்று ஹிட்லர் கண்டிப்பாக கூறியதை, பல்கேரிய அரசராகிய போரிஸ் என்பவர், ஆலோசித்துக்கொண்டிருக்கிறார். ஏதாவது சாக்கு போக்குச் சொல்ல வழியிருக்கின்றதா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

கருங் கடலில் கிழக்குக் கடற்கரைப் பட்டணமாகிய பேடம் என்ற இடத்தை ரஷ்யர்கள் கடற்படை தளமாக்கிக் கொண்டுவருகின்றார்கள்.

கருங்கடலுக்கு வடக்கிலுள்ள கிரைமியா பிரதேசத்தை ஜெர்மானியர்கள் தாக்கினார்கள். ரஷ்ய போக்குவரத்து சாதனங்கள் பலமாகத் தாக்கப்பட்டன. சண்டை இந்த இடத்தில் மும்முரமாக நடந்துகொண்டிருக்கின்றது. விரோதிகள் ஆபீசர்களுள்பட 2,500 பேர் கொல்லப்பட்டனரென்றும், 300 பேர் கைதியாயினரென்றும், ருமேனிய காலாட் படைகள் அழிக்கப்பட்டனவென்றும், மாஸ்கோ செய்தி கூறுகின்றது.

செப்டம்பர் 29-ல் ரஷ்ய தலைநகரமான மாஸ்கோவில், மூன்று வல்லரசுகளின் (பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா) மகாநாடு கூடியது. ரஷ்யா சார்பாக மாலதோவும், பிரிட்டனுக்காக பீவர்புரூக் பிரபுவும், அமெரிக்காவிற்காக ஹாரிமன்னும் வந்திருந்தார்கள். இந்த மகாநாடு அரை மணி நேரம் தான் கூடியது. உடனே, ஆறு கமிட்டிகள் நியமிக்கப்பட்டன; தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, போக்குவரத்து, மூலப்பொருள்கள், வைத்திய 'சப்ளைகள்' ஆகிய இந்த ஆறு கமிட்டிகளும் உடனே வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டன.

ரஷ்ய தலைவராகிய ஸ்டாலின், பிரிட்டிஷ் பிரதிநிதியாகிய பீவர் புரூக் பிரபுவுடனும், அமெரிக்க பிரதிநிதியாகிய ஹாரிமன்னுடனும், இரண்டு தடவைகள் கலந்து பேசினார். மிஸ்டர் ஹாரிமன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார் :—" மாஸ்கோ பலதடவைகள், ஜெர்மானியரால் தாக்கப்பட்டது. ஆனால் குண்டுகளினால் சேதங்கள் ஒன்றுமில்லாமலிருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றது......நாங்கள் துரிதமாக வேலை செய்வோம். ஏனென்றால் காலம் மிகவும் முக்கியமாயிருக்கின்றது. மகாநாடு ஒரு வாரத்தில் முடிந்துவிடும். ரஷ்யாவில், அமெரிக்க ஆகாய விமானங்களும், பெட்ரோல் எண்ணெயும் முன்னமேயே வந்து இறக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யாவிற்கு வேண்டிய உதவி செய்யத் தயராயிருக்கின்றது."

லெனின்கிராட் பகுதியில் 7 நாள் டாங்கி யுத்தம் மும்முரமாக நடந்தது. ஜெர்மனியரால் லெனின்கிராடை பிடிக்கமுடியவில்லை. ஆபீசர்களுட்பட சுமார் 1,500 ஜெர்மானியர் கொல்லப்பட்டனர். 269-வது ஜெர்மன் படையில் கொல்லப்பட்டவர்கள் ஆயிரத்துக்கு மேலிருக்கும். விரோதிகளுக்காக சென்று கொண்டிருந்த யுத்த சாமான்கள் கொண்ட 20 மோடார் லாரிகளும், 10 டாங்கி லாரிகளும், 2 ரிப்பேர் ஷாப்புகளும், டின்களில் உணவு "பேக்" செய்யப்பட்ட 200 பெரிய பெட்டிகளும், துணிமணிகளும்,வைத்திய சப்ளைகளும் குண்டுகள் போட்டு அழிக்கப்பட்டன.

லெனின்கிராட் பகுதியில் சண்டை நடந்துகொண்டிருக்கும்போது, ஒரு ரஷ்ய பெண்மணி, ஜெர்மன் துருப்புகளிடையே பிரவேசித்துத் திரும்பிவந்து வேண்டிய உணவு கொடுத்தார். இதனால் ஜெர்மன் ஆபீசர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், ஒரு ரஷ்ய டாங்கியினாலேயே, அந்த ஆபீசருட்பட அங்கேயிருந்த எல்லா ஜெர்மானியரும் கொல்லப்பட்டனர்.

லெனின்கிராட் பிடிபட்டதும் பின்லாந்து யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ளலாம் என்று ஜெர்மனி கூறுகின்றது. பின்லாந்து ரஷ்யாவுடன் மேலும் மேலும் சண்டைசெய்ய விரும்பவில்லை. அது சமாதானத்தையே விரும்புகின்றது என்பது ஜெர்மனிக்குத் தெரியும். ஆனால் லெனின்கிராட் இன்னும் பிடிபடவில்லையே. அதற்குள் எப்படி பின்லாந்தை விட்டுவிடுவது என்று ஜெர்மனி யோசிக்கிறது.

கருங்கடலுக்கு வடக்கிலுள்ள கிரைமியா பிரதேசத்தில் செப்டெம்பர் 24-ம் தேதி நடு ராத்திரியில் சண்டை ஆரம்பமாயிற்று. ஜெர்மானியர்கள் விமான விரிகுடை (பாரசூட்) மூலமாக பெருவாரியாக துருப்புகளை ஆகாயத்திலிருந்து கிரைமியாவில் இறக்க முயற்சி செய்தார்கள். ரஷ்யர்கள் கடுமையாக எதிர்த்துத் தாக்கி ஜெர்மன் துருப்புகளைச் சின்னாபின்னமாக்கிவிட்டனர்.

யூக்ரெயின் பிரதேசத்தில் மழை பெய்தது ரஷ்யர்களுக்கு அனுகூலமாயிருக்கின்றது.

ட்னியப்பர் ஆற்றுச் சண்டையில், ஐந்து ரஷ்ய பட்டாளங்களை அழித்துவிட்டதாகவும், 6,65 0 0 ரஷ்யர்கள், 885 டாங்கிகள், 3,718 பீரங்கிகள் அழிக்கப்பட்டு அல்லது கைப்பற்றப்பட்டு இருக்கின்றனவென்று ஜெர்மன் ராணுவ ஆபீஸ் அறிக்கை கூறுகிறது.

ஒடெஸ்ஸா பகுதியில், விரோதிகள் வடமேற்காக ரஷ்யர்களால் துரத்தியடிக்கப்பட்டனரென்றும், எய்கென்ஹெய்ம் என்ற இடத்திற்குத் தெற்கே ஒரு முக்கியமான உயர்ந்த இடத்தில் ரஷ்யர்கள் பீரங்கிகளை வைத்துக்கொண்டு விரோதிகளைத் தவிடுபொடியாக்குகின்றனரென்றும் ஒரு ரஷ்ய ராணுவ நிருபர் தெரிவிக்கிறார். ஜெர்மானியர்களும், ருமேனியர்களும் சுமார் 50,000 பேர் கொல்லப்பட்டனரென்று அவர் கூறுகின்றார். ருமேனிய ஆஸ்பத்திரிகளில் காயம்பட்டவர்களின் தொகை அதிகமாயிருந்ததால், இடம் போதாமல் ருமேனிய தலைநகரமாகிய புகாரெஸ்டில் உள்ள பள்ளிக்கூடங்களிலும், குடியிருக்கும் வீடுகளிலுமுள்ள அறைகளிலும், காயம்பட்ட ருமேனிய துருப்புகளுக்கு இடவசதி செய்யப்பட்டிருக்கின்றதென்று ராய்ட்டர் நிருபர் தெரிவிக்கிறார்.

ரஷ்ய துருப்புகள் பெருவாரியாக சைபீரியாவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனவென்றும், மஞ்சூகோ எல்லைப்புறத்தில் பலமான முஸ்தீப்புகள் செய்துகொண்டிருப்பதாகவும், துருக்கிக்கு ரஷ்யாவிலிருந்துவந்த ஒரு அமெரிக்க வாத்தியார் தெரிவித்தார். ரஷ்ய கைத்தொழிற் சாலைகள், மாஸ்கோ, லெனின்கிராட், கீப் என்ற இடங்களிலும் யூரால்ஸ் மலைப் பிரதேசங்களில் பலவிடங்களிலும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

5. பால்கன்ஸ், துருக்கி, இரான் முதலியன.

பால்கன் நாடுகளில் ஒன்றாகிய பல்கேரியாவை எப்படியாவது ரஷ்ய யுத்தத்தில் இழுத்துவிடவேண்டுமென்பது ஹிட்லரின் எண்ணம். அதற்காக பல்கேரிய அரசர் போரிஸை வசப்படுத்த சில காலமாக முயற்சி நடைபெற்று வந்தது. கடைசியில், பல்கேரியப் பட்டாளங்கள் ரஷ்ய யுத்த முனைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று ஹிட்லர் கண்டிப்பாய்க் கேட்டதாகவும், அதற்குச் சரியான பதில் சொல்லாமல், இந்த கஷ்டமான நிலைமையிலிருந்து நழுவுவதற்கு அரசர் போரிஸ் முயற்சி செய்கிறாரென்றும்சொல்லப்படுகிறது. இதற்கு முன் பல்கேரியா ரஷ்யாவுடன் போர் தொடுக்கும் என்று துருக்கி அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்பட்டன.

துருக்கியில் உள்ள ஜெர்மன் ஸ்தானீகர், வான் பேபன், துருக்கி குடியாட்சித் தலைவர், பிரசிடெண்ட் இனோனுவைப் பேட்டி காண வேண்டிக்கொண்டிருக்கிறார். அவரிடம் ஹிட்லருடைய கடிதம் ஒன்றைக் கொடுக்கப் போகிறாராம். வியாபார சம்பந்தமாக சாமர்த்தியமாகப் பேசி காரியம் முடிப்பதில் கைதேர்ந்தவர் என்று பேரெடுத்த டாக்டர் கிளாடியஸ் துருக்கியின் தலை நகராகிய அங்காராவில் சில நாள் அதிகமாக இருக்கப்போவதாகவும், கிரீசின் தலை நகராகிய ஆதன்சுக்குப் போவதைத் தள்ளி வைத்துக்கொண்டாரென்றும் தெரிகிறது. இந்த இரண்டு பெரிய நாஸித் தலைவர்கள் துருக்கியில் தங்கியிருப்பதால், துருக்கிக்கும் ஜெர்மனிக்கும் நடந்த வியாபாரப் பேச்சு தடைபட்டுப் போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அதை ஒழுங்குபடுத்துவதற்கே டாக்டர் கிளாடியஸ் அங்காராவில் தங்கியிருக்கிறாராம்.

துருக்கிக்கு பிரிட்டன் சென்ற வெள்ளிக்கிழமை அநேக ஆகாய விமானங்களை அனுப்பியிருக்கிறது. அவைகள் அங்காராவுக்கு வந்து சேர்ந்தன என்று அங்காரா ரேடியோவில் அறிவிக்கப்பட்டது.

6. கப்பல் நிலைமை.

செப்டெம்பர் மாதம் 22-ந் தேதி சாயங்காலம் வரைக்கும் எதிரிகளின் கப்பல்களுக்குச் செய்த நஷ்டங்களின் விவரங்கள் சென்றவாரம் வெளியிடப்பட்டன. அவைகளின் சுருக்கம் பின்வருமாறு :—

ஹாலந்தின் கடற்கரையோரத்தில் இருந்த கப்பல்களின்மேல் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. எதிரிக் கப்பல்களுக்குப் பலத்த சேதம் உண்டாக்கின. ஒரு துணை உதவிக் கப்பலின்மேல் தொடர்ச்சியாக வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஒரு 5,000-டன் கப்பலின்மேல் குறிப்பாக சில வெடிகுண்டுகள் விழுந்தன. ஹூக் என்ற இடத்துக்கு அருகில் நான்கு வர்த்தகக் கப்பல்கள் தாக்கப்பட்டு, நெருப்புப் பிடித்துக்கொண்டு

எரிந்தன. ஒரு வேவுபார்க்கும் கப்பல் முழுகடிக்கப்பட்டது. ஒரு கப்பல் வெடிகுண்டு தாக்குதலினால் இரு துண்டாக முறிந்துவிட்டது.

நார்வே கடற்கரையோரத்தில் இரண்டு எதிரிக் கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. பெல்ஜியத்தின் கடற்கரையோரத்தில், இரண்டு நீர்க்குண்டு கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. இரண்டு இதர கப்பல்கள் அதிகமாக பழுதாக்கப்பட்டன. விமான எதிர்ப்புத் தளவாடங்களுடன் போய்க்கொண்டிருந்த இரண்டு கப்பல்கள் கடலுக்குள் முழுகடிக்கப்பட்டன. வடகடலில் துணை உதவிக் கப்பல்களைத் தாக்கிய இரண்டு ஜெர்மன் நீர்முழுகிக் கப்பல்கள் (‘ சப்மரீன்’கள்) பழுதாக்கப்பட்டன. பிஸ்கே விரிகுடாவில் ஒரு ‘ சப்ளை’ கப்பல் நான்கு தடவைகள் தாக்கப்பட்டன. இங்கிலீஷ் கால்வாயில் வேவுபார்த்துக்கொண்டிருந்த ஒரு கப்பல் பலமாகத் தாக்கப்பட்டது.

இதல்லாமல், ஹாம்பர்க், வில்ஹெல்ம்ஷேவன், கக்ஷேவன், பிரெமென் முதலிய ஜெர்மன் கப்பற்சாலைகளும், ஆஸ்டெண்டு, பலோன், லூஹேவர் கப்பற்சாலைகளும் பிரிட்டிஷ் விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டன.

சுமார் 24,469-டன் எடையுள்ள இரண்டு இத்தாலியக் கப்பல்கள், ஆப்பிரிக்காவில் உள்ள லிபியாவுக்கு எதிரிகளின் உதவிக்காக சிப்பாய்களும் சாமான்களும் ஏற்றிக்கொண்டு போய்க்கொண்டிருந்தன. அவைகள் இரண்டும் மத்தியதரைக் கடலில் அடியோடு நாசமாக்கப்பட்டன. மற்றொரு கப்பல் பழுதாக்கப்பட்டது. திரிபோலி துறைமுகத்துக்குக் கொஞ்சதூரத்தில், சாமான்கள் நிறைந்த ஒரு வர்த்தகக்கப்பல், கொளுத்தப்பட்டு தண்ணீரில் முழுகிவிட்டது ; ஒரு நாசகாரிக்கப்பல் தாக்கப்பட்டது. திரிபோலியிலும், பென்காசியிலும் உள்ள துறைமுகங்களில் இருந்த கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

மேலே கூறப்பட்டவை எதிரிக்கப்பல்கள் தாக்கப்பட்டதைப்பற்றி சென்றவாரம் வெளியிடப்பட்டவிவரங்கள்.

அமெரிக்கக் கப்பற்படை கமிட்டியின் தலைவர், ரியர்-அட்மிரல் லாண்டு, வர்த்தகக் கப்பல்கள் அதிகமாகச் செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றிச் சென்றவாரம் சொன்னார். வர்த்தகக் கப்பல்கள் இன்னும் ஏராளமாகச் செய்யவேண்டும் ; அவைகளின் மூலமாக ‘ சப்ளை’ சாமான்கள் அனுப்பிக்கொண்டேயிருந்தால், உலக சுதந்தரத்தை அழிக்க முயலும் ஹிட்லரிசத்தைத்தோற்கடித்துவிடலாம் என்றுஅவர்கூறினார்.

மத்தியதரைக் கடலில், இத்தாலியக் கப்பல்கள் அதிகமாக முழுகடிக்கப்படுகின்றன. இத்தாலியிலிருந்து லிபியாவுக்கு அனுப்பப்படும் ஐந்து கப்பல்களில் குறைந்தபட்சம் ஒரு கப்பல் பிரிட்டிஷ் நீர்முழுகிக் கப்பல்களால் முழுகடிக்கப்படுகிறது என்று ஒரு கடற்படைத்தலைவர் “ ராய்ட்டர் ” நிருபரிடம் கூறினார். லிபியாவுக்குச் செல்லும் இத்தாலியக் கப்பல் ஓட்டிகளுக்கும் வேலையாட்களுக்கும் வரும்படி அதிகப்படுத்தப்பட்டது. நூற்றுக்கு முப்பது வீதம் அவர்களுக்கு இப்போது அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இத்தாலிய ‘ கான்வாய்’ (துணை உதவி) கப்பல்கள், பிரிட்டிஷ் நீர்முழுகிக் கப்பல்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக அதிவேகமாக ஓட்டப்படுகின்றன. அப்படி இருந்தும், இத்தாலிய வர்த்தகக் கப்பல்களில் நூற்றில் முப்பது, பிரிட்டிஷ் நீர்முழுகிக் கப்பல்களால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன ; இன்னும் இருபது சேதமாக்கப்பட்டு, இப்போது பழுதுபார்க்கப்படுகின்றன.

7. தூரக்கிழக்கு நாடுகள்.

சென்ற வாரத்தில் இங்கிலாந்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் பெருவாரியாக சிங்கப்பூரில் நேராக வந்திறங்கின. இந்த துருப்புகளில் பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கின்றனர். யுத்த தளவாடங்களும் பெருவாரியாக சிங்கப்பூரில் இறக்கப்பட்டிருக்கின்றன.

சென்ற வாரத்தில் 350 ஜப்பானியர்கள் ஷாங்கேயிக்குப் போகும் பிரஞ்சு கப்பலில் பிலிப்பைன் தீவுகளை விட்டு வெளியேறினார்கள்.

சிங்கப்பூர் கடற்படைத் தளத்தில் சென்றவாரம் முக்கியமான ஒரு மகாநாடு நடந்தது. பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதி, மிஸ்டர் டப் கூப்பரும், பிரிட்டிஷ் ராணுவத் தலைவர்களும் யுத்த நிலைமைப்பற்றி கலந்து பேசினார்கள்.

சீனாவில், ஹூனான் பிரதேசத்தில் சண்டை மும்முரமாக நடக்கின்றது. ஜப்பானியர்கள் சாங்ஷா தலை நகரைப் பிடிக்க முன்னேறி வருகிறார்கள். சீனர்களும் பலமாக எதிர்க்கின்றனர். ஜப்பானியர்கள் சாங்ஷாவைப் பிடித்துவிட்டதாகக் கூறுகின்றனர். அதை சீனா இன்னும் மறுக்கவில்லை. மைலோ ஆற்றின் வட கரையிலும் சண்டை நடக்கின்றது. வடவாற்றின் வடக்கே ஜப்பானியர்கள் கான்டன் பிரதேசத்தில் முன்னேறிச் செல்கின்றனர். சீனாக்காரர்கள் ஜப்பானியத் துருப்புகளுக்கு பின் புறத்திலுள்ள முக்கிய இடங்களைப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். இதனால் ஜப்பானியர்கள் தெற்குப் புறமாக முன்னேறி வருவதைத் தடுக்கக்கூடும் என்று சீன ராணுவஸ்தர்கள் நினைக்கின்றனர்.

இண்டோ-சீனாவில் வீடுவீடாக ஜப்பானிய துருப்புகள் சோதனை போடுகின்றன. 50 ‘ஜப்பானிய-சீனாக்காரர்கள்’ (கலப்பு வகுப்பு) கைதியாக்கப்பட்டனர். ஜப்பானியர்கள் இண்டோ-சீனாவிற்கு வருவதற்கு முன்னமேயே, இரகசியமாக இந்த சீனாக்காரர்கள் பிரவேசித்திருக்கக்கூடுமென்று டோகியோவிலிருந்து வந்த செய்தி கூறுகிறது. நோட்டீஸ் கொடுக்காமல் வீடுகளைச் சோதனை போட்டது சரியல்லவென்றும், பிரஞ்சு சர்க்காரை மீறி நடந்தது தப்பென்றும் பிரஞ்சு அதிகாரிகள் பலமாகக் கண்டிக்கின்றனர்.

8. விஷி.

மிகவும் விசேஷமான செய்தி யொன்றுமில்லை.

9. ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.

பாரிஸ் பிரதேசத்தில் வசிக்கும் யூதர்களில் 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய பெயரை போலீஸ் ஸ்டேஷனில் அக்டோபர் முதல் தேதியிலிருந்து, பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று நாஜிகள் உத்தரவிட்டிருக்கின்றனர். எதற்காக இந்த உத்தரவு இடப்பட்டது என்பது தெரிவிக்கப்படவில்லை.

செக்கோஸ்லாவாக்கியாவில் உள்ள தலைவர்களில் முக்கியமான ஆறு பேர்கள் கைதி செய்யப்பட்டு சென்ற ஞாயிற்றுக்கிழமை நாஜிகளால் கொல்லப்பட்டனர். இவர்கள் சிறந்த ராணுவதளபதிகள். வேறு இருபது பேர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களுள் பிராண்டிகெக் ஹொராசெக் என்ற ‘ரிடையரான’ தளபதியும், பொது உடமைக்கக்ஷியைச் சேர்ந்த பிரபலஸ்தர்களும், பிராண்டிசெக்வன்ச் என்ற ரொட்டிக்காரரும், ஜான் பெஸ்டுதா என்ற தையற்காரரும், காரோஸ்லாவ் செட்லாசெக் என்ற [illegible] வேலைக்காரரும், தூசான் சுப்ர்ட் என்ற ஒரு [illegible]கும் இருந்தனர்.

யூகோஸ்லாவிய கொரில்லாக்கள் (குரங்குச் சண்டையைப்போல் சண்டைபோடுபவர்கள்) இரண்டு மாதங்களில் நாஜிகளுக்கு எதிரிடையாக 12 பாலங்களை அழித்தனர் ; 400 வெடிமருந்து டிபோக்களுக்குத் தீவைத்தனர் ; 17 புகை வண்டிகளை (ரயில்களை) தண்டவாளத்தைவிட்டு கீழேவிழும்படி செய்து சுமார் 10,000 விரோதிகளைக்கொன்றனர் என்று மாஸ்கோ ரேடியோ செய்தி கூறுகிறது.

10. நடு நிலைமை நாடுகள்.

சென்ற சனிக்கிழமை, ஸ்பெயினிலிருந்து, பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய சர் சாமுவேல் ஹோர், ஆகாய விமான மூலமாக லண்டனுக்குப் போனார். அவர் கூறியதாவது :—

“ நான் 15 மாதங்களுக்குமுன் ஸ்பெயினுக்குப் போனபோதுள்ள நிலைமையைவிட இப்போதுள்ள நிலைமை மிகவும் திருப்திகரமானதாகவேயிருக்கின்றது. இப்போது ஸ்பெயினில் நண்பர்கள் பலரிருக்கின்றனர்.”

சர் சாமுவேல் ஹோர், லண்டனுக்குப்போகும் வழியில் போர்ச்சுகல் தேசத்தின் தலை நகராகிய லிஸ்பனில், ஹாலிபாக்ஸ் பிரபுவைச் சந்தித்தார். ஹாலிபாக்ஸ் பிரபு, அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர். இவர் லண்டனிலிருந்து அமெரிக்காவிற்கு போகும்போது மேற்கூறப்பட்ட சந்திப்பு ஏற்பட்டது.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.